# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

CPIML LIBERATION

2023 மே 16-31 தொகுதி 21 இதழ் 19

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200







# நீதிக்காகப் போராடும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக ஒன்றுபட்டு நிற்போம்!! - திபங்கர்

# பாஜகவுக்கான தென்னிந்தியாவின் நுழைவு வாயில் மூடப்பட்டு விட்டது!

மக்கள் விரோத, பிரிவினைவாத பாஜகவுக் கும் சங் பரிவாரின் சூழ்ச்சிகளுக்கும் கர்நாடக மக்கள் தீர்மானகரமான தோல்வியை அளித்ததற்கு இகக(மாலெ) பாராட்டுகளைத் தெரிவிக்கிறது. 2024ல் வரவிருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவின் தோல்விக்கு இந்த வெற்றி ஒரு முன்னோட்டமாக அமைய வேண்டும்.

கர்நாடக மக்களுடைய தீர்ப்பு, பாஜகவின் பிரிவினை வாத பிரச்சாரத்துக்கு எதிரானது. அது பாஜக அரசாங்கத்தின், இதுவரை பார்த்திராத ஊழலுக்கு எதிரான குரல். இந்தத் தீர்ப்பு விலைவாசி உயர்வுக்கு, வாழ்க்கைச் செலவின அதிகரிப்புக்கு எதிரானது. இது உடைந்து நொறுங்கும் நிலையிலுள்ள மாநிலத்தின் உட்கட்டுமானத்திற்கு, விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோதச் சட்டங்களுக்கு எதிரானது. அதுபோல இது ராக்கெட் வேகத்தில் செல்லும் வேலையின்மை, நொடிந்து போன மாநிலப் பொருளாதாரம், பெண்களுக்கு எதிரான, அவர்களின் சுயாட்சிக்கு எதிரான வன்முறை, பெருகிவரும் சாதிய வன்கொடுமைகள், மத நல்லிணக்கமின்மை, மத வெறுப்பு மற்றும் மதவெறிக்கு எதிரான தீர்ப்புமாகும்.

பிரதம மந்திரி நரேந்திர மோடியை களத்தில் இறக்கி விட்ட பிறகும், மாநிலம் முழுவதும் அவரை வைத்து சாலைகளில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்திய பிறகும் பாஜக அடைந்துள்ள படுதோல்வி, மோடி என்ற பிராண்ட பிம்பத்தை உருக்குலைக்கவே முடியாது என்பதற்கு எதிரான அறிகுறியாகும். வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிராகவும் தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்த பிறகு அமைதியாக இருக்க வேண்டிய காலம் உட்பட நடத்தை விதிகளை மீறியதற் காகவும் நடவடிக்கை எடுக்கத் தவறிய பல் இல்லாத தேர்தல் ஆணையம் ஆகியவை எல்லாம் மாநிலத்தில் ஜனநாயக முறைகள் சீர்குலைந்து போயிருப்பதையே காட்டுகிறது.

ஆட்சியில் இருந்த பாஜக அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் தோல்வியுற்றதை இந்தத் தேர்தலில் பார்க்க முடிந்தது. கோவிட்19 நெருக்கடி காலத்தில் முறையற்ற நிர்வாகத்திற்காக சுகாதாரத் துறை அமைச்சர் சுதாகர் தோற்கடிக்கப் பட்டார். அதுபோல் ஹிஜாப் அணிய தடை விதித்த, முஸ்லிம் மாணவிகளை அவமானப் படுத்தியதோடு அவர்களுக்கு கல்வியை மறுத்த கல்வி அமைச்சர் பி.சி. நாகேஷ் தோல்வி அடைந்தார். பாஜகவின் தேசியச் செயலாளர் சி.டி.ரவியின் தோல்வி பாஜகவின் மதவாத அரசியல் நிகழ்ச்சிகளை மக்கள் நிராகரித்ததற்கான அழுத்தந் திருத்தமான செய்தி யாகும்.

இகக(மாலெ) போட்டியிட்ட கே.ஆர்.புரம் தொகுதியிலும் கனககிரி தொகுதியிலும் மேற் கொண்ட கடினமான பணிகளுக்குப் பிறகும் எதிர் பார்த்த பலன் கிடைக்கவில்லை. தேவையான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு தவறுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். பாஜகவின் பாசிச தாக்குதலுக்கெதிராக இகக(மாலெ) வீதிகளில் தொடர்ந்து குரலை கொடுக்கும் அதே வேளை, வரவிருக்கிற புதிய அரசாங்கம், மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதையும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதையும் உறுதி செய்யும்.

''பாஜகவை தோற்கடிப்போம், கர்நாடகாவை பாதுகாப்போம்'' என்ற நமது முழக்கத்தை நிறைவேற்றுகிற வகையில் வாக்களித்த கர்நாடக மக்களுக்கும் 2 தொகுதிகளில் இகக(மாலெ) வுக்கு வாக்களித்த மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாஜக அரசாங்கத்தின் செயல்பாடு பற்றி, அதன் மக்கள் விரோதக் கொள்கைகளைத் தோலுரித்து, பல்வேறு துறைகளின் செயல்பாடு பற்றிய தரவுகளுடன் கூடிய அறிக்கைகளை வெளியிட்டு அம்பலப்படுத்தி அதன் தோல்விக்கு உதவிய 'பகுத்வ கர்நாடகா', 'எட்டெலு கர்நாடகா' போன்ற அமைப்புகளுக்கும் மற்றும் சிவில் சமூக இயக்கங்களுக்கும் அதுபோல் ஓய்வில்லாமல் களப்பணி ஆற்றிய தனி நபர்களுக் கும் இகக(மாலெ) வணக்கம் செலுத்துகிறது.

சில மாதங்களில் தேர்தல் நடைபெற இருக்கிற சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், மிசோரம், ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா மாநில மக்கள், மக்கள் விரோத வெறுப்பு அரசியல் நடத்தும் பாஜகவை தோற்கடித்து ஜனநாயகத்தையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**கர்நாடக மாநிலக் கமிட்டி**
**இகக(மாலெ)**

2023 மே 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 19

## உள்ளே

| | |
|---|---|
| பாஜக ஆளும் மணிப்பூரில் | 4 |
| திமுகவின் இரண்டு ஆண்டு ஆட்சி | 6 |
| ஏஐசிசிடியு மாநில பொதுக்குழு-பயிற்சிப்பட்டறை | 9 |
| சாராயத்தில் ஏது கள்ளச் சாராயம் நல்ல.. | 13 |
| கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்பு | 15 |
| ஜெய் ஜவான், ஜெய் கிஷான் | 17 |

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)
தமிழ்நாடு
மாநிலக்கமிட்டியின்
அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# மோடியின் வெத்துவேட்டு மேளாக்கள்

மோடி ஆட்சிக்கு வந்ததில் இருந்து, மெகா மேளாக்களைத் தான் நடத்திக் கொண்டிருக்கிறார். கர்நாடகா சட்டமன்றத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று பிரதமருக்கு இருக்கக் கூடிய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு 'சாலைக் காட்சிகளை'(Road Shows)நடத்தினார். கர்நாடகத்தில் இருந்த பூக்களையெல்லாம் தன் மீது அள்ளி வீசச் சொல்லி ஷோ காட்டினார். ஆனால், அந்த ஷோவுக்கெல்லாம் கர்நாடக மக்கள் தக்க பதிலடி கொடுத்துவிட்டுள்ளார்கள். மோடி ஆட்சிக்கு வந்ததும் எல்லாருக்கும் வங்கிக் கணக்கு, ஏழைகளுக்கும் வங்கிக் கணக்கு என்று சொல்லி காசில்லாமல் வங்கிக் கணக்கை துவக்கச் சொன்னார். அதில் நான் பணம் போடுவேன் என்றார். உங்கள் ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்திடுங்கள், உங்கள் எரிவாயு எண்ணையும் அதோடு இணைத்திடுங்கள், எரிவாயு சிலிண்டருக்கான மானியப் பணத்தை நான் உங்கள் வங்கிக் கணக்கில் போட்டு விடுகிறேன் என்றார். கொஞ்ச நாட்கள் பணம் போட்டார்கள். அடுத்து வங்கியில் குறைந்தபட்சம் தொகை கணக்கில் இருக்க வேண்டும் என்றார்கள். பின்னர் நம் பணத்தை கொள்ளை அடிக்க ஆரம்பித்தார்கள். இப்போது சிலிண்டருக்கான மானியப் பணமும் போடப்படவில்லை. சிலிண்டர் விலையும் இமாலய சிகரம் தொட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. அதேபோல் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை என்று சொன்னார். ஆனால், இருந்த கொஞ்ச நஞ்ச வேலைகளையும் பறித்தார். இப்போது ரோஜ்கார் மேளாவாம். அதாவது ஒன்றிய அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை இதன் மூலம் நிரப்புகிறார்களாம். மே 16 அன்று நடந்த நிகழ்ச்சியில் வீடியோ கான்பரஸ் மூலம் 71 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை மோடி வழங்கியுள்ளார். இந்த 71 ஆயிரம் பேருக்கும் அது நிரந்தர வேலைதானா என்பது கேள்விக்குறி. இது ஒரு புறம் இருக்க, ஒன்றிய அரசுத் துறைகளில் சுமார் 30 லட்சம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. இதுவரை இவற்றை நிரப்புவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் மோடி அரசு எடுக்கவில்லை. மாறாக, இருக்கின்ற வேலைகளையும் பறிக்கின்ற நடவடிக்கையையே மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. அரசுத் துறைகளையெல்லாம் தனியார் கையிலே தாரை வார்த்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அரசுத்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்பும் திட்டமான ரோஜ்கர் மேளாவில், தான் வால்மார்ட், ஆப்பிள், பாக்ஸ்கான், சிஸ்கோ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினேன் என்றும் நாட்டில் தொழில் மற்றும் முதலீடு எப்போதும் இல்லாத வகையில் நேர்மறையான சூழல் காணப்படுகிறது என்று பேசுகிறார். அரசுப் பணியிடங்கள் எத்தனை காலியாக உள்ளன. அவற்றினை நிரப்புவதற்கு தன்னுடைய அரசு என்ன செய்துள்ளது, இதுவரை எவ்வளவு பேருக்கு அரசுத் துறையில் வேலை வழங்கப்பட்டுள்ளது என்று எதுவும் பேசவில்லை. மாறாக முன்னணி தனியார் நிறுவனங்களைப் பற்றிப் பேசுகிறார். அந்நிய நேரடி முதலீடும் ஏற்றுமதியும் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றது என்கிறார். ஆட்சேர்ப்பு முறையில் தன்னுடைய அரசு கொண்டு வந்த மாற்றங்கள் காரணமாக ஊழல் மற்றும் உறவினர்களுக்குச் சலுகை வழங்குவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என்கிறார். அரசுத் துறைக்கு ஆட்கள் சேர்ப்பு நடத்தாமல் இருப்பதுதான் மோடி கொண்டுவந்துள்ள மாற்றம். ஊழல் மற்றும் உறவினர்களுக்கு சலுகை பற்றி மோடி பேசுவதுதான் விந்தை முரண். கர்நாடகாவில் இதற்காகத்தான் பாஜக ஆட்சி தூக்கியெறிப்பட்டுள்ளது. இப்படிப் பொய் மேளாக்களை நடத்துவதுதான் மோடி கொண்டு வந்துள்ள மாற்றங்கள். அதற்கும் மக்கள் 2024ல் பதிலடி கொடுப்பார்கள். ❑

# பாஜக ஆளும் மணிப்பூரில் பழங்குடிகளுக்கு பாதுகாப்பின்மையும் இன வன்முறையும்!

*ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, கர்நாடகா வாக்காளர்களைப் பார்த்து காங்கிரஸ் வெற்றி பெற்றால், மாநிலத்தில் கலவரங்கள் வெடிக்கும் என்று எச்சரித்துக் கொண்டிருந்தபோது, பாஜக ஆளும் மணிப்பூரில் மோசமான இன வன்முறை வெடித்தது. அது திட்டமிடப்பட்ட கலவரம் என்பதற்கான அனைத்து அடையாளங் களையும் கொண்டிருந்தது. ஒன்றிய அரசு, பாஜக ஆளும் மாநிலங்களில் 'இரட்டை இயந்திர அரசாங்கம்' உள்ளது என்றது. மணிப்பூரில் அரசிலமைப்புச் சட்டப் பிரிவு355ஐ பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிய இரட்டை இயந்திர ஆட்சி, கண்டதும் சுட உத்தரவிட்டது. இறந்தவர்கள் எண்ணிக்கை 50ஐத் தாண்டியது. மாநிலத் தலைநகர் இம்பால் உள்பட, மலைகள் முதல் சமவெளி வரை எல்லா இடங்களிலும் வன்முறை பரவியது. உயர் பதவியில் இருந்த பழங்குடி அதிகாரிகளும் தலைவர்களும் கூட வன்முறைக் கும்பல்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டார்கள். பல்வேறு தேவாலயங்கள் தீக்கிரையாகின. கடந்த காலங்களில் இருந்த கொஞ்சநஞ்ச அமைதியும் கூட மோசமாக அடித்து நொறுக்கப்பட்டது.*

*வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் சட்ட ஒழுங்கு மட்டும் கெட்டுப் போகவில்லை, மணிப்பூரின் மென்மையான சமூகக் கட்டுமானத்தில் ஆழமான விரிசல்களும் ஏற்பட்டுள்ளது என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் காட்டுகின்றன. ஒன்றிய அரசின் பழங்குடியினப்பட்டியலில் மெய்ட்டி சமுதாயத்தையும் சேர்க்க வேண்டும் என்ற மேல் முறையீட்டு வழக்கில் உயர்நீதிமன்றம் மாநில அரசாங்கத்திற்குப் பிறப்பித்த உத்தரவுதான் தற்போதைய வன்முறைக்குப் பின்னால் இருந்த உடனடிக் காரணமாகும். உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. எந்த ஒரு சமூகக் குழுவினரையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கச் சொல்லும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்குக் கிடையாது என்று உச்சநீதிமன்றம் தற்போது கூறியுள்ளது. சங்கிலித் தொடர்போல் தொடர்ந்து நடந்துள்ள சம்பவங்களுக்கு இந்த ஒரு விசயம் மட்டுமே காரணமாக இருக்க முடியாது. அது முன்னமே திட்டமிட்டு கட்டமைக்கப் பட்டுள்ளது. மணிப்பூரின் அடிப்படைச் சூழலில், தற்போதைய வெளிப்பாடும் நமது கவனத்தைக் கோருகிறது. இனச் சுத்தப்படுத்துதல் நிகழ்ச்சி நிரலைக் கொண்டுவந்த பிரேந்திர சிங் அரசாங்கத்தை இதற்குக் காரணம் என்று பாஜகவின் பழங்குடியின சட்டமன்ற உறுப்பினர்களே குற்றஞ்சாட்டுகிறார்கள்.*

**கலாச்சார வேற்றுமையையும் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளையும் பழங்குடியின சமூகத்தினரின் அபிலாஷைகளையும் பாதுகாப்பதுதான் வடகிழக்கின் அமைதி, ஜனநாயகம் மற்றும் வளர்ச்சிக்கான மையமாகும்.**

*மணிப்பூரில் காலங்காலமாக ஆதிக்கத்தில் உள்ள மெய்ட்டி சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரியது, மணிப்பூரில் உள்ள குர்கீஸ், நாகாஸ், மிசோஸ் மற்றும் இதர பழங்குடியின சமூகத்தினரைக் கோபமடையச் செய்தது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதே. மெய்ட்டி சமூகத்தினருக்கு பழங்குடி அந்தஸ்து கொடுப்பதின் மூலம் அவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு பலன்கள் கிடைக்கும் என்பது மட்டுமல்ல, பழங்குடியின மக்களுக்காகவே தற்போது பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருக்கும்*



நிலத்தில் அவர்களும் உரிமை கொண்டாட முடியும். ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட காடுகள் என்றும் காட்டு விலங்குகள் புகலிடம் என்றும் அறிவிப்பு செய்து பழங்குடி சமூகத்தினர் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த குடியிருப்புகளை அவர்களிட மிருந்து பிடுங்கி வைத்துள்ளனர். மலைப் பகுதிகளை நிர்வாகம் செய்யும் மலைப் பகுதிகள் கமிட்டியின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. அஸ்ஸாம் போலவே மணிப்பூரிலும் தேசிய குடியுரிமைப் பதிவேட்டை (என்ஆர்சி) கொண்டுவருவதற்கான பாஜகவின் முயற்சியே பழங்குடி சமூகத்தினரிடையே எதிர்ப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. பாதகமான சூழல் காரணமாக மியான்மரில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் மணிப்பூருக்கு பக்கத்தில் உள்ள மலைகளில் உள்ள பழங்குடியினர் வசிப் பிடங்களில் அகதிகளாக வசிக்கக் கோரிய வர்களை சட்டவிரோதமாக ஊடுருவிய வர்கள் என்று முத்திரை குத்தப் பட்டனர். மணிப்பூரின் குக்கீஸ் மற்றும் இதர பழங்குடியின மக்கள் எல்லை தாண்டி மியான்மர் பகுதியில் உள்ள பழங்குடி மக்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளார்கள். அப்படியிருக்கும் போது மியான்மரில் இருந்து அகதிகளாக வருபவர் களை, விரோதிகளாகச் சித்தரிக்கும் மணிப்பூர் பாஜக அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக, மணிப்பூர் பழங்குடியினர் தங்களுடைய சொந்தச் சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்களுக்கு உதவ முடியாத கையறு நிலையில் அவர்கள் வருத்தப்படுவது வெளிப்படை யானது. நாட்டில் வேறு இடங்களில் நடக்கும் சங் பரிவார்களின் கிறிஸ்தவர்களுக்கு எதிரான, மதமாற்றத்திற்கு எதிரான முரட்டுதனமான பிரச்சாரத்திற்கு இசைவாக மணிப்பூரிலும் தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அது சொந்த நிலத்தில் இருந்து பழங்குடி மக்களை அந்நியப் படுத்தும் ஓரங்கட்டும் செயல் வட்டத்தை முழுமையாக்கியது.

வட கிழக்கின் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்துவதாக பாஜக சொல்லிக் கொள்கிறது. அதனுடைய மதத் துருவச் சேர்க்கை மற்றும் அடையாள அரசியலின் மோசமான சேர்மானம்தான் அஸ்ஸாம் அரசியலில் வெளிப்படையாக வேரூன்றியிருக்கிறது. அஸ்ஸாமிற்கு அடுத்து, பாஜக திரிபுராவிலும் மணிப்பூரிலும் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. மணிப்பூரில் அதன் வளர்ச்சியானது முதன்மையாக சமவெளியிலுள்ள மெய்ட்டி சமூகத்தினரிடையேதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், பாஜகவின் ‘மலைகளுக்குச் செல்வோம் 2.0’ என்கிற பசப்பலான பரப்புரையின் வாயிலாக அதிகப் படியான பழங்குடியினரிடம் செல்வது என்ற ஒரு கொள்கையைப் பின்பற்றுவதாகப் பாசாங்கு செய்து கொண்டிருக்கிறது. தற்போதைய இன வன்முறையின் சலசலப்பானது சங் பரிவாரத்தின் வடகிழக்கிற்கான கேடுகெட்ட திட்டத்தின் உண்மையான சாரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. கலாச்சார வேற்றுமை யையும் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளையும் பழங்குடியின சமூகத்தினரின் அபிலாஷைகளையும் பாதுகாப்பதுதான் வடகிழக்கின் அமைதி, ஜனநாயகம் மற்றும் வளர்ச்சிக்கான மையமாகும். பாஜகவின் இந்துத்துவ பெரும் பான்மைவாத நிகழ்ச்சி நிரலானது மென்மையான தன்மை கொண்ட வடகிழக்கு இந்தியாவிற்கு விரோத மானதாகும். மணிப்பூரின் தற்போதைய சூழலானது பாஜகவின் தீவிர நிகழ்ச்சி நிரலின் ஆபத்தான தாக்கங்கள் பற்றியும் வட கிழக்கு இந்தியாவில் அது வளர்ந்து கொண்டிருப்பது பற்றியும் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது.

**எம்எல் அப்டேட் தலையங்கம்**
**9 – 15 மே 2023,**
**தமிழாக்கம் – ஜி.ரமேஷ்**

# திமுகவின் இரண்டாண்டு ஆட்சி!

**பாலசுந்தரம்**

> **பாரதிய ஜனதாவுக்கும் நரேந்திர மோடியின் பாசிசத்துக்கும் எதிரான வாக்குகள் ஒன்று திரண்டதால் மட்டுமே, பத்தாண்டுகள் காத்திருப்பில் இருந்த திமுகவால், மீண்டும் ஆட்சிக்கு வரமுடிந்தது என்பதை வசதி கருதி ஸ்டாலின் மறக்க நேர்ந்தால் திமுகவின் எதிர்காலத்துக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கே கூட நல்லதல்ல**

*திமுகவின் இரண்டாண்டு ஆட்சியை, "ஈடில்லா ஆட்சி, இரண்டாண்டு ஆட்சி" "ஆண்டது ஈராண்டு ஆளப்போவது நூறாண்டு" என்றும் கொண்டாடப்படுகிறது. திமுக ஆட்சியின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென்றும் திமுக தலைமை முடிவு செய்துள்ளது.*

*இதிலிருந்து திமுக அரசின் எண்ணத்தையும் அணுகு முறையையும் எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும். மேலே கூறிய முழக்கங்களை வெறும் ஜனரஞ்சக அரசியல் முழக்கமாக மட்டும் கருதி, கடந்து சென்றுவிட முடியாது. இந்த ஆட்சியில், யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை. எல்லாம் மிகச் சிறப்பாகவே நடக்கிறது. இந்த "திராவிட மாடல்" ஆட்சிதான் இந்தியா முழுவதும் பின்பற்றப்பட வேண்டிய ஆட்சி என்றும் கருத்து பரப்பப்படுகிறது.*

*ஆனால், இரண்டாண்டு வெற்றிக் கொண்டாட்டத்தை அறிவிப்பதற்கு முன்பு திமுக அரசு பெரும் எதிர்ப்பை சந்தித்து பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஏஐசிசிடியு உள்ளிட்ட தமிழ்நாட்டின் தொழிற்சங்கங்கள் மட்டுமின்றி, திமுகவின் கூட்டணிக் கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், தொழிலாளர்களுக்கு 12 மணி நேர வேலை என்ற தொழிலாளர் விரோத சட்டத்தை திரும்பப் பெறவேண்டிய நெருக்கடி திமுக ஆட்சிக்கு ஏற்பட்டது. மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக, சட்டத்தை திரும்பப் பெறுவதற்கும் "துணிச்சல்" வேண்டும் என்று கூறி முதலமைச்சர் தனது வீரத்தை பறைசாற்றிக் கொண்டார்.*

*கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரின் இறுதிநாளில் 17 சட்டங்களை நிறைவேற்றி திமுக அரசு சாதனை படைத்தது! இதில் மற்றுமொரு சட்டம், நில ஒருங்கிணைப்பு சட்டம். அகில இந்திய விவசாயிகள் மகாசபை உள்ளிட்ட இடது விவசாய அமைப்புகளும் இகக(மாலெ) உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் இந்த சட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மேலும் பல விவசாய அமைப்புகளும் ஆளுமைகளும் திமுக அரசின் இந்த சட்டத்தை எதிர்த்து வருகின்றனர். மோடி அரசின் விவசாய விரோத விவசாயச் சட்டங்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிய அதே சட்டமன்றத்தில், கார்ப்பரேட் ஆதரவு விவசாயிகள் விரோத நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பது அரசின் இரட்டை நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 12 மணி நேரவேலைச் சட்டம் போல, இந்தச் சட்டமும் திரும்பப் பெறப் படுகிற வரை திமுக ஆட்சி, போராட்டங்களை எதிர்கொள்ளப்*

போவது தவிர்க்க முடியாதது.

12 மணி நேர வேலை நேரம், நில ஒருங்கிணைப்புச் சட்டம் இவ்விரண்டும் அரசின் பொருளாதார கொள்கைத் திசைவழியைக் காட்டுவதாகவே உள்ளன. 2030ல் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் (ரூ.75 லட்சம் கோடி) பொருளா தாரமாக ஆக்கும் இலக்கை எட்டும் நோக்க முடையது. அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் தென்கிழக்காசியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக்கும் நோக்கத்தை ஒட்டியே இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு தொழிற் சாலை நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், அமைச்சர் மாறினாலும் தொழில்துறைக்கும் முதலீட்டுத் துறைக்கும் அரசு அளிக்கும் முக்கியத் துவம் மாறாது என்று கூறி தொழில்துறை சமூகத்துக்கு தனது ஆட்சியின் உறுதிப்பாட்டை தெரிவித்திருக்கிறார். அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கும் டிஆர்பி.ராஜா குறித்து சமூக வலைத் தளங்களில் பல கருத்துகள் உலவுகின்றன. ஆனால், முதலமைச்சர் கூறிய கருத்திலிருந்தும், அமைச்சர் டிஆர்பி.ராஜாவின் பின்புலத்திலிருந்தும் தெரியவருவது, அவர் காவிரிச் சமவெளியிலிருந்து வரும் கார்ப்பரேட் பெரும்புள்ளி என்பதுதான். சமூகநீதி அமைச்ச ரவையில், கார்ப்பரேட் செல்வாக்கு மேலும் அதிகரித்திருப்பதன் அடையாளம்தான் அமைச் சரவை மாற்றம். இதனோடு சேர்த்துப் பார்க்க வேண்டியது, கல்விக் கொள்கை தொடர்பாக மாநில அரசின் அணுகுமுறை. மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக, மாநிலத்திற் கென்று ஒரு கல்விக் கொள்கை உருவாக்கு வதற்காக மாநில அரசு கல்வியாளர் குழு வொன்றை ஏற்படுத்தியது. இது கல்விச் சமூகத்தின் வரவேற்பை பெற்றது. ஆனால், பல மாதங்களுக்குப்பிறகும் இதில் எவ்வித முன்னேற் றத்தையும் காணமுடியவில்லை. எனவேதான், கடந்த மார்ச் 31, தோழர் சந்திரசேகர் நினைவு நாளில், அகில இந்திய மாணவர் கழகமும் புரட்சிகர இளைஞர் கழகமும் சேர்ந்து ஒரு சிறப்பு மாநாட்டை மதுரையில் நடத்தியது. இந்த மாநாட்டில், தேசிய கல்விக் கொள்கைக்கெதிராக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; மாநிலத்திற்கான கல்விக் கொள்கை விரைவில் கொண்டுவர வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இப்போது, மேனாள் துணைவேந்தர் திரு.ஜவகர் நேசன், அந்தக் கல்விக் குழுவிலிருந்து விலகியுள்ளார். கல்விக்குழுவின் சுதந்திர செயல்பாட்டிற்கு அரசு செயலாளர் தடையாக இருக்கிறார் என்று ஜவகர் நேசன் குற்றஞ்சாட்டியுள்ளார். மட்டுமின்றி, தேசிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்துகிற வகையிலேயே அரசின் செயல்பாடு இருக்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள ஜவகர் நேசன், முதலமைச்சர் தனது கடிதங்களுக்கு பதிலளிக்க வில்லையென்ற ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துள்ளார். தேசிய கல்விக் கொள்கைக்கு எதிரான தனது போராட்டம் தொடரும் என்றும் உறுதிபட தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி முதலமைச்சர் இதுவரை எந்த கருத்தையும் சொல்லவில்லை. மாறாக குழுவின் தலைவர் மேனாள் நீதிபதி முருகேசன் மட்டும் குழுவின் செயல்பாட்டில் எவ்வித தலையீடு மில்லை என்று அறிக்கை விடுத்துள்ளார். இந்த சச்சரவுக்கு தீர்வுகாண ஒரே வழி, சட்டப் பேரவையில் தேசியக் கல்விக்கொள்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதும் மாநிலக் கல்விக் கொள்கையை விரைவில் வெளியிடு வதும்தான். தொகுத்துச் சொன்னால், அரசின் தொழில், முதலீட்டுக்கொள்கை, நிலத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் கொள்கை, கல்விக் கொள்கை தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கை அடிப்படை யிலானது.

திமுக ஆட்சியின் இந்த இரண்டாண்டு காலத்தில், தலித்துகள், பெண்கள் பாதுகாப்பும் மானுட உரிமையும் மிகக் கேள்விக்குள்ளாகி உள்ளன. பள்ளி மாணவி சிறிமதி மர்ம மரணம் தமிழ்நாடு தழுவிய கோபத்தை ஏற்படுத்தியது. மாணவியின் மரணம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்துகளை நீக்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. ஆயினும், ஓராண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த மர்ம மரணத்தில், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதில், அந்த குடும்பத்துக்கு நீதி வழங்குவதில் அரசு எந்த முன்னெடுப்பையும் மேற்கொள்வதாக தெரியவில்லை. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை தொடங்கி, கலா ஷேத்திரா மாணவிகள் மீதான வன்கொடுமைகள் வரை இன்னும் குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப் படவில்லை. இதுபோன்ற நிகழ்வு களில் ஏடுகளில் பரபரப்பாக செய்தி வருவதோடு சரி, பிறகு அவை கரைந்து காணாமல் போய் விடுகின்றன. சமூக நீதி ஆட்சியில் பெண்களது பாதுகாப்பும் உரிமையும் பாதுகாக்கப்படாவிடில், எங்கே இருக்கிறது சமூகநீதி? பெண்களுக்கு அச்சமற்ற சுதந்திரம் வேண்டும்; கல்வி

நிறுவனங்கள் பெண்மாணவர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்க வேண்டும், பெண்கள் வன்கொடுமை வழக்குகளில் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப்பட வேண்டுமென்று அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் குரலெழுப்பி வருகிறது. இந்தக் குரலை ஒதுக்கித் தள்ளிவிடாமல் அரசு உரிய அக்கறை செலுத்தி தீர்வுகாண வேண்டும்.

தமிழ்நாட்டின் 'நாகரிக', 'பண்பாட்டு'ப் பெருமைக்கு பெருத்த கறையாக வந்திருப்பது வேங்கைவயல் கொடூரச் சம்பவம். ஐந்து மாதங்களுக்குப் பிறகும் காவல்துறை சிறு துரும்பைக் கூட கண்டுபிடிக்கவில்லை. மாறாக, வேங்கைவயல் மக்களைச் சந்திக்க முயன்ற இகக(மாலெ), அவிகிதொச தலைவர்களையும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி தலைவர்களையும் ஊருக்குள் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியுள்ளது காவல்துறை. கடந்த மே 9 அன்று, "வேங்கைவயல் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவது எப்போது? தண்டிக்கப்படுவது எப்போது? எனக்கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்), நீதிக்கான மக்கள் இயக்கம், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் ஆகிய அமைப்புகள் சேர்ந்து நடத்தவிருந்த பொது விசாரணைக்கு அரசு அனுமதி மறுத்துவிட்டது. ஆனால், நீதிக்கான குரலை எந்தவகையிலும் நெரித்துவிடமுடியாது.

கேரளா ஸ்டோரி திரைப்படத்துக்கு அனுமதி அளித்துள்ள தமிழ்நாடு அரசு, விடுதலை சிகப்பி எழுதிய உருவக கவிதை, இந்துக் கடவுள்களை அவமதித்துவிட்டதாகக் கூறி அவரை காவல் துறை கைது செய்துள்ளது. இதை, முற்போக்கு, ஜனநாயக சக்திகள், கலாச்சார அமைப்புகள் கண்டித்த பிறகும் தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்தவில்லை! கனியாமூர், வேங்கைவயல், அம்பாசமுத்திரம், தூத்துக்குடி என தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடு கேள்விக்குள்ளாகி உள்ளது. ஆனால் சட்டப்பேரவையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது, காவல்துறை எவ்வித அரசியல் தலையீடுமின்றி மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் காவல்துறைக்கு நற்சான்று அளித்துள்ளார். காவல்துறை மனித உரிமைகளை, குடியுரிமைகளை மதித்து நடக்கவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால், காவல்துறை பற்றிய முதலமைச்சரின் எண்ணம் வேறாக இருக்கிறது. "காக்கி உடையில் காவிகள்" என்ற கருத்தை வலுப்படுத்துவதுபோல் உள்ளது. இது தொடர்ந்தால்,'சாத்தான்குளங்களை' நோக்கி நகரும் நாட்கள் வெகுதொலைவில் இல்லையோ என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. தூத்துக்குடி மாவட்ட கிராம நிர்வாக அலுவலர் கொலை செய்யப்பட்டது, ஆற்றுமணல் உள்ளிட்ட கனிம வளங்களை, இயற்கைவளங்களைக் கொள்ளையடிக்கும் சட்டவிரோத மாபியா கும்பல் காவல்துறை உள்ளிட்ட அனைத்துதுறைகளிலும் கோலோச்சுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. கொலையுண்டவருக்கு இழப்பீடு சரிதான்.

ஆனால் இனி எவரும் கொலையாகாமலிருக்க, மாபியா கும்பல்கள் கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட வேண்டும். இதற்கு, திமுக அரசுக்கு 'துணிச்சல்' வேண்டும்.

இதற்கிடையில், கர்நாடகாவிலிருந்து மிக நல்ல செய்தி வந்திருக்கிறது. பாரதிய ஜனதா கட்சி ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறது. இது குறித்து, "திராவிட நிலப்பரப்பிலிருந்து பாஜக வெளியேற்றப் பட்டிருக்கிறது" என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். பாஜக தோற்கடிக்க முடியாத சக்தியல்ல என்பதை கர்நாடக மக்கள் சாதித்துக் காட்டியிருக்கும் உறுதிப்பாட்டை பாராட்டுகிற வகையில் முதலமைச்சரின் மகிழ்ச்சியை நாமும் பகிர்ந்துகொள்ளலாம். ஆனால், பாஜக, அரசியலில், சமூகத்தில் இன்னும் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

கர்நாடக மக்கள், பாஜகவின் மதவெறுப்பு அரசியலுக்கெதிராக கிளர்ந்து எழுந்துள்ளனர். அதுமட்டுமின்றி, பாஜகவின் ஊழல், தாங்க முடியாத விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம் உள்ளிட்ட மிக மோசமான பாஜக ஆட்சிக்கு எதிராக கர்நாடக மக்கள் கிளர்ந்து எழுந்துள்ளார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

"பாரதிய ஜனதாவுக்கும் நரேந்திர மோடியின் பாசிசத்துக்கும் எதிரான வாக்குகள் ஒன்று திரண்டதால் மட்டுமே, பத்தாண்டுகள் காத்திருப்பில் இருந்த திமுகவால், மீண்டும் ஆட்சிக்கு வரமுடிந்தது என்பதை வசதி கருதி ஸ்டாலின் மறக்க நேர்ந்தால் 'திமுகவின் எதிர்காலத்துக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கே கூட நல்லதல்ல' என்று உயிர் எழுத்து (மே 2023) தலையங்கம் சுட்டிக்காட்டுகிறது. கர்நாடக தேர்தல் தீர்ப்பின் பின்னணியில், இதை மீண்டும் நினைவுபடுத்துவது அவசியம். ❑

## ஏஐசிசிடியு மாநில பொதுக்குழு – பயிற்சிப் பட்டறை

# 2024ல் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்! செயல் துடிப்புமிக்க போராட்டச் சங்கமாக ஏஐசிசிடியுவை தமிழகத்தில் வளர்த்தெடுப்போம்!




தமிழக அரசு கொண்டு வந்த 12 மணி நேர வேலை சட்டத்தை தமிழக தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டம் மூலம் முறியடித்த பின்னணியில் மே 7,8–2023 இரு நாட்கள் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கலில் ஏஐசிசிடியு மாநில பொதுக்குழு கூட்டமும் பயிற்சி பட்டறையும் நடைபெற்றது. நிகழ்ச்சியை தோழர்கள் இரணியப்பன், கோவை பாலசுப் பிரமணியன், கரூர் பால்ராஜ், சேலம் வேல் முருகன் ஆகியோர் கொண்ட குழு தலைமை தாங்கி நடத்தியது. நிகழ்ச்சியில் ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர், இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி ஆகியோரும் கலந்து கொண்டனர். பொதுக்குழு உறுப்பினர்கள், அழைப்பாளர்கள் என சுமார் 70 பேர் இரு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, திண்டுக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருப்பத்தூர், சென்னை, தர்மபுரி, நாமக்கல், தூத்துக்குடி, தஞ்சாவூர், மயிலாடு துறை, தேனி மாவட்டங்களிலிருந்து மின் வாரியம், போக்குவரத்து, நுகர்பொருள் வாணிபக் கழகம், சுகாதாரத்துறை, தோல் மற்றும் தோல் பொருள், கட்டுமானம், ஜவுளி, விசைத்தறி, ஆட்டோ ஓட்டுநர், பொதுத்துறை, கன்டெய்னர் லாரி ஓட்டுநர், சுமைதூக்குவோர், தரைக்கடை வியாபாரிகள், இதர அமைப்புசாரா தொழிலாளர்கள் என முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்

முதல் அமர்வில் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் முன் உள்ள சவால்கள் (மாறி வரும் சேர்க்கை, எழுந்து வரும் சவால்கள் மற்றும் நமது அணுகுமுறை) என்ற தாள் மாநிலத் தலைவர் தோழர் சங்கர பாண்டியன் அவர்களால் முன்வைக்கப்பட்டது

இந்தத் தாள் குறிப்பாக 92 சதவீத தொழிலாளர்கள் அமைப்புசாராத் தொழிலாளர்களாக இருக்கும்போது அதிலும் கணிசமான பிரிவினர் சுய தொழில் முனைவோராக, சிறு வியாபாரம் முதல் சிறு முதலீடு கொண்டு தொழில் செய்பவர்களாக இருக்கும் சூழல் சவால்கள் நிறைந்ததாகவும் அதே சமயம் வாய்ப்புகள் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஊதி பெருகியுள்ள சேவைத் துறையில் ஓலா, உபர் டிரைவர்கள் முதல் உணவு விநியோகம், கிக்(gig) தொழிலாளர்கள், தொழில்நுட்பத் துறை நிறுவனங்களின் ஊழியர்கள் வரை தொழிலாளர் சேர்க்கை உள்ளது. விவசாயம், கூலி வேலை என்று இரட்டைத் தன்மை உள்ள தொழிலாளர்களாகவும் உள்ளனர். அரசின் பல்வேறு திட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் உள்ளனர். பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் வேலை செய்யும் ஆட்டோ மொபைல், எலக்ட்ரானிக்ஸ் துறைகளும் நாம் கவனம்

செலுத்த வேண்டிய துறைகள் ஆகும். இந்த தொழிலாளர்களை அமைப்பாக்க ஒற்றை சூத்திரம் கிடையாது. புதிய உத்திகள் தேவைப் படுகின்றன என்பதையும் தாள் விரிவாக விவரித் திருக்கிறது. முதலாளி-தொழிலாளி உறவு தெளிவாக இல்லாத போது அரசாங்கத்துக்கு எதிரான கோரிக்கைகள், போராட்டங்கள் என்பதாக இயக்கம் இருக்கும். இத்தகைய சவால் மிக்க பணியை செய்வதற்கான பல்வேறு மரபார்ந்த மற்றும் மரபுக்கு அப்பாற்பட்ட அணுகுமுறைகள் பற்றியும் தாள் எடுத்துக் கூறி இருக்கிறது.

முன்வைக்கப்பட்டுள்ள தாளின் பல்வேறு பரிமாணங்கள் மீது தோழர்கள் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இரண்டாவது அமர்வில் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக பாத்திரமும் அதனை அரசியல் படுத்துதலும் என்னும் தாள் முன் வைக்கப் பட்டது.

மாமேதை லெனின் என்ன செய்ய வேண்டும்? என்ற நூலில் எழுதிய, தொழிற்சங்க தலைவரிலிருந்து மாறுபட்டு சோசலிச தலைவரின் குணாம்சம் என்னவாக இருக்க வேண்டும் என்ற மேற்கோளிலிருந்து தாள் துவங்குகிறது. வர்க்கம் இறந்து விட்டதா? என்ற கேள்வியை எழுப்பி வர்க்கப் பார்வைக்கு புது வெளிச்சம் காட்டுகிறது. தாராளமய காலகட்டத்தில் அமைப்புசாராத் தொழிலாளர் களின் பெருக்கம் எப்படி வலதுசாரி கருத்தியலின் எழுச்சிக்கு உதவியது என்பதை குறிப்பிட்டு, தொழிலாளர்களை அரசியல் படுத்த சிறப்பு முயற்சிகள் தேவை என்கிறது. நகர பொருளா தரத்தின் முறை சார்ந்த துறையில் இருந்து பெருமளவில் தொழிலாளர்கள் வெளியேற்றப் பட்டதற்கும் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வன்முறை வெடித்ததற்கும் இடையே ஒரு இயல்பான நேரடி உறவு இருந்தது என எழுத்தாளர் ஜான் பிரேமன் குறிப்பிடுவதை தாள் சுட்டிக்காட்டியது.

தோழர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு தாள் மீது விவாதம் கட்டமைக்கப்பட்டது.

ஒவ்வொரு குழுவின் விவாதங்களையும் தொகுத்து குழுவின் சார்பில் ஒருவர் அவையில் முன் வைத்தார். சிபிஐ(எம்எல்) மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி இந்த தாள் மீது தனது விரிவான கருத்துக்களை முன் வைத்தார்.

தொழிலாளர்களை அரசியல் படுத்த 'மன்றம்' என்ற வடிவத்தை பயன்படுத்துவது பற்றியும் பாசிசக் கருத்தியலை எதிர்கொள்ள மன்றம் போன்ற அமைப்புகளின் அவசியம் பற்றியும் தாள் பேசுகிறது. உள்ளூர் மட்ட தோழர்களின் ஆற்றல் மிக்க படைப்பாற்றலுடன் புதிய சிந்தனையுடன் மன்றங்களை செயல்படுத்த வேண்டும் என்கிறது. அரசியல் அதிகாரத்தை தொழிலாளி வர்க்கம் கைப்பற்றுவதன் அவசியத் தையும் அதற்கான உத்திகளையும் இந்தத் தாள் முன்வைக்கிறது.

மூன்றாவதாக தமிழக தொழில், தொழி லாளர் வர்க்க நிலைமைகள் பற்றிய தாளை ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் ஞானதேசிகன் முன் வைத்தார்.

தமிழகத்தில் போக்குவரத்து ஊழியர்கள் நீண்ட கால ஊதிய உயர்வு உடன்பாடு எட்டப் பட்டுள்ளது. பெண்களுக்கு கட்டணம் இல்லா பயணம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்களுக் கான ஓய்வூதியப் பயன்கள், ஓய்வூதியம், மருத்துவ வசதி ஆகியவற்றில் தொடர்ந்து பிரச்சினை இருந்து வருகிறது. போக்குவரத்தில் தனியார் மயமாக்கம் எனும் கத்தி தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பழைய பென்ஷன் திட்டம் கொண்டுவரப்படும் என்ற திமுகவின் தேர்தல் வாக்குறுதி அமல்படுத்தப் படவில்லை. அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்பதாக நிதி அமைச்சர் அறிவித்திருக் கிறார்.

நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் கொள் முதல், சேமிப்பு, விநியோகத்தை தனியார் மயப்படுத்த தொடர் முயற்சிகள் நடக்கின்றன. பகுதி நேர ஆசிரியர்கள், தற்காலிக செவிலியர் கள், டாஸ்மாக் ஊழியர்கள் பணி வரன்முறை, பணி நிரந்தரம் கோரிக்கை நீறு பூத்த நெருப்பாக உள்ளது. அரசு செவி மடுப்பதாய் தெரியவில்லை. மின்சாரத் துறையில் ஊழியர்கள், பொறியாளர் களின் சக்தி வாய்ந்த சென்னை பேரணிக்குப் பிறகு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை துரிதமாக நடந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான காலிப் பணியிடங்களை நிரப்புதல், ஒப்பந்தத் தொழி லாளர் பணி நிரந்தரம் ஆகிய கோரிக்கைகள் கண்டு கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. மின்சார துறையை தனியார்மயமாக்கும் மின்சார சட்ட திருத்த மசோதாவுக்கு எதிரான போராட்டம் தொடர்கிறது.

டாஸ்மாக்கில் விற்பனையாளர்களின் உயிர்

பாதுகாப்பு முதல் பணி நிரந்தரம் வரை கோரிக்கை உள்ளது. அனைத்து சங்கங்கள் சார்பில் அமைச்சர் சந்திப்புக்கு பிறகு சொற்ப ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஊழியர்களிடையே கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. பிற சங்கங்களுடன் இணைந்து கூட்டு நடவடிக்கை தொடர்கிறது.

தூய்மைப் பணியாளர்களின் குறைந்தபட்ச ஊதிய கோரிக்கை மாநிலம் முழுவதும் எழுந்து வருகிறது. தொழிலாளர்கள் பணி நிரந்தரம் கோரி வரும்போது ஒட்டுமொத்த தூய்மை பணியையும் அவுட்சோர் சிங் மூலம் செய்வது என்பதை நோக்கி அரசாங்கம் நகர்கிறது. தூய்மைப் பணியாளர்களை மாநிலம் முழுவதும் அமைப் பாக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து சங்கங்களும் இணைந்து நடத்திய விசைத்தறி போராட்டத்தில் கூலி உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அமலாக்கம் பெரும் பிரச்சனையாக உள்ளது. போராட்டத்தை குமாரபாளையம், பள்ளிப் பாளையம் பகுதிகளில் தொடர வேண்டியுள்ளது. தோல் மற்றும் தோல் பொருளில் தொழிற்சாலை கலைப்புக்கு எதிராக தொழிலாளர்களின் பாக்கிகளை பெறுவதற்கான போராட்டம் தொடர்கிறது. கம்பெனி சட்ட தீர்ப்பாயத்தில் சட்டரீதியாகவும் வீதிகளிலும் போராட்டத்தை தொடர்கிறோம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர் பிரச்சினையில் தொடர்ந்து தலையிடுகிறோம். சமீபத்தில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் கரும்பு வெட்டும் கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்பதில் சிறப்பான பங்காற்றியிருக்கிறோம். கட்டுமானத் தொழிலாளர்களை அரசியல் சக்தியாக அறுதி யிடச் செய்யும் தொழிற்சங்க இயக்கமாக்க "சங்கம் முதலில், வாரியம் இரண்டாவதாக" என்ற முழக்கத்துடன் செல்ல வேண்டும். அதே சமயத்தில் வாரியப் பயன்களை அதிகரிக்கவும் விரிவுபடுத்தவும் நமது போராட்டங்களைத் தொடர வேண்டும். கார்ப்பரேட் நலனிலிருந்து கொண்டுவரப்பட்ட 12 மணி நேர வேலை சட்டம் தமிழக தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டத்தால் முறியடிக்கப்பட்டி ருக்கிறது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்க விரிவாக்கமும் டெல்டா மாவட்டங்களில் புதிய சுரங்கங்களுக்கான அறிவிப்பும் மக்கள் இயக்கங் களால் பின்னுக்கு தள்ளப்பட்டிருக்கிறது. பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கு எதிரான போராட்டம் தொடர்கிற போதே தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. புரட்சிகர தொழிற்சங்கம் விழிப்போடு செயல்பட்டு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது

இரண்டாம் நாள் அமர்வு நடைமுறை வேலைகள் பற்றியதாக இருந்தது.

### 1) உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை தீவிரப்படுத்துக

தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் உறுப்பினர் ஆக்குவதே அவர்களை அரசியல் படுத்துதலில் முதல் படி என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 5,000 உறுப்பினர் இலக்கை அடைய வேண்டும் கட்டுமானம், விசைத்தறி பீடி, அமைப்புசாரா தொழிலாளர்கள் புதிய வகை கித் தொழி லாளர்கள், ரயில்வே ஒப்பந்த தொழிலாளர்கள் என்பதோடு நமது அமைப்பாக்கப்பட்ட மாநில சங்கங்களான மின்வாரியம், போக்குவரத்து, நுகர்பொருள் வாணிபக் கழகம், டாஸ்மாக் சங்கங்களை விரிவாக்குவதும் பலப்படுத்துவதும் செய்யப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட அமைப்புகள் அதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

2) ஜுலை 7 தமிழ்நாடு ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்க 4 ஆவது மாநில மாநாடு கன்னியாகுமரியில் நடைபெறும். மாநாட்டுக்கு மாநிலம் முழுவதுமிருந்து திட்டமிட்டபடி வேன், பேருந்துகளில் தொழிலாளர்களை அணிதிரட்டிட வேண்டும். பெருந்திரள் பொது மாநாடாக மாநில மாநாடு நடைபெறும்.

3) ஜுலை 8 – 9 இரண்டு நாட்கள் அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனம் (AICWF) அகில இந்திய மாநாடு பிரதிநிதிகள் மாநாடாக கன்னியாகுமரியில் நடைபெறும். இந்தியா முழுவதுமிருந்து சுமார் 400 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகளையும் வெற்றிகரமாக்க எல்லா வகையிலும் உதவுவது என பொதுக்குழு முடிவு செய்தது.

### 4) மாவட்ட மாநாடுகள்

ஜுலை 20ஆம் தேதிக்குள், தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்ட மாநாடு களை நடத்தி முடித்திட வேண்டும். தேர்ந் தெடுக்கப்பட்ட மாவட்ட அமைப்பு ஜுலை 24 முதல் ஆகஸ்ட் 8 வரையிலான மாநிலம் தழுவிய

பிரச்சார இயக்கத்தையும் ஆகஸ்டில் வெள்ளை யனே வெளியேறு நாள் இயக்கத்தையும் சிறப்பாக நடத்திட வேண்டும்.

### 5) ஆகஸ்ட் மாத இயக்கம்

ஆகஸ்ட் 9ஆம் தேதி, சென்னையில் அனைத்து தொழிற்சங்கங்கள் அணி திரட்டும் “பெருந்திரள் அமர்வு” இருக்கின்ற காரணத்தால், மாவட்டங்கள் ஆகஸ்ட் முதல் வாரத்தில் அதிக எண்ணிக்கையில் அணிதிரட்டலுடன் மாவட்ட மட்ட நிகழ்ச்சியாக நடத்த வேண்டும். சென்னை நிகழ்ச்சியில் சென்னை, திருவள்ளூர், செங்கல் பட்டு மாவட்டங்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

6) செப்டம்பர் அக்டோபர் மாத வாக்கில் ஏஐசிசிடியு மாநில மாநாட்டை கரூரில் நடத்தலாம் என பொதுக்குழு முடிவு செய்தது.

7) நவம்பர் டிசம்பர் மாத வாக்கில் கன்னி யாகுமரியில் இருந்து சென்னை வரை தமிழக தொழிலாளர் கோரிக்கையின் மீது பிரச்சார இயக்கத்தை நடத்திட பொதுக்குழு முடிவு செய்தது.

### தீப்பொறி

தொழிலாளர்கள் மத்தியில் தீப்பொறி பத்திரிகை கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் பற்றி ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவரும் தீப்பொறி ஆசிரியருமான தோழர் ஜி.ரமேஷ் வலியுறுத்திப் பேசினார்.

**ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர் தனது உரையில்...**

புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் பல்வேறு மாநிலங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். தொழிலாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பு, கூலிப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு என்ற முக்கிய அம்சங்களை உத்தரவாதப்படுத்த வேண்டும். மே நாள் என்பது தொழிலாளர்களின் தியாக வரலாற்றை குறிக்கின்ற நாள். அன்றைய நாள் அன்னதானம் வழங்குவது, விருந்து படைப்பது போன்ற நிகழ்வுகள் நமது அமைப்புக்கு உசிதமானது அல்ல என்றார்.

தொழிலாளர்களிடம் புரட்சிகர அரசியலை கொண்டு செல்ல ‘மன்றங்கள்’ என்ற அமைப்பு வடிவத்தின் தேவை பற்றியும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இடதுசாரிக் கட்சிகள் தவிர மற்ற எல்லா கட்சிகளும் கார்ப்பரேட் ஆதரவு கட்சிகள் தான். ஆனால், பாஜக மத வெறி பாசிச கட்சி. அதனால்தான் எப்பாடு பட்டாகினும் 2024 தேர்தலில் மோடி ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அகில இந்திய அளவில் துறை சார்ந்த பல்வேறு சம்மேளனங்களின் மாநாடுகள், போராட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது பற்றி குறிப்பிட்டு சொன்னார்.

தமிழக தொழிற்சங்க இயக்கத்தின் புரட்சிகர மரபை உயர்த்திப் பிடிக்க அறைகூவல் விடுத்தார்.

இரண்டு நாள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த தர்மபுரி தோழர்களுக்கு பாராட்டு தெரிவித்து கூட்டம் நிறைவடைந்தது.





# சாராயத்தில் ஏது கள்ளச் சாராயம் நல்ல சாராயம்!

**சங்கரந்தம்பி**

"ஈடில்லா ஆட்சி, இரண்டு ஆண்டே சாட்சி" என்று ஆளும் திமுக சாதனைக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்திலும் செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூரிலும் கள்ளச்சாராயம் குடித்து 22 பேர் மரணமுற்றுள்ளார்கள். பலர் சிகிச்சையில் உள்ளார்கள். திமுக தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளில் முக்கியமான ஒன்று பூரண மது விலக்கு. பத்திரிகை நிருபர்கள் திரு. ஸ்டாலின் அவர்களிடம், சாராய ஆலைகள் பல தங்கள் கட்சிக்காரர்களால் நடத்தப்படுகின்றதே! நீங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த ஆலைகள் மூடப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு திரு.ஸ்டாலின் பூரண மது விலக்கு என்று வந்து விட்டால் ஆலைகளுக்கு என்ன வேலை, ஆலைகளும் மூடப்படும் என்று சொன்னார். உதயநிதி ஸ்டாலின், திமுக ஆட்சியில் அமர்ந்தவுடன் முதல் கையொப்பம் மது விலக்குதான் என்று சொன்னார். ஆனால், டாஸ்மாக் கடைகளை மூடுவதற்குப் பதிலாக டாஸ்மாக் கடைகளில் விற்பனைக்கான டார்கெட்தான் அதிகமாகிக் கொண்டே போனது. பூரண மது விலக்கு என்பதற்குப் பதிலாக படிப்படியாக மது விலக்கு கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். சமீபத்தில் கூட சட்ட மன்றத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி 500 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்றார். இன்னொருபுறம் பேருந்து நிலையங்களில் தானியங்கி மதுப் புட்டிகள் சேவையைத் துவக்கினார்கள். அது மட்டுமின்றி திருமண மண்டபங்களில் மது விருந்துக்கு அனுமதி என்றார்கள். எதிர்ப்பு கிளம்பிய பின்னர் அந்த அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டது. இந்த சூழலில்தான் தற்போது 22 பேர் கள்ளச் சாராயம் குடித்து இறந்து போயுள்ளார்கள்.

பூரண மது விலக்கு கோரிக்கை எழும் போதெல்லாம் ஆட்சியாளர்கள் எப்போதுமே ஒரு வாதத்தை முன் வைப்பார்கள். மது விலக்கு வந்து விட்டால், மக்கள் பக்கத்து மாநிலங்களுக்குச் செல்வார்கள், கள்ளச் சாராயத்தை நாடுவார்கள் என்பார்கள். டாஸ்மாக் கடைகள் இருக்கும்போது எதற்காக மக்கள் கள்ளச் சாராயத்தை நாடுகிறார்கள். டாஸ்மாக்கிலும் மது பானங்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதுதான் காரணம் என்கிறார்கள். டாஸ்மாக்கில் போன நிதியாண்டு வருமானம் ரூ.36,000 கோடி. இந்த நிதியாண்டு அதாவது 2022–23ல் வருமானம் ரூ.44,000 கோடி.

ஒருபுறம் டாஸ்மாக் கடைகளைத் திறந்து வைத்து எளிய மக்களை எல்லாம் குடிக்கு அடிமையாக்கிவிட்டு, சாராயம் இல்லாமல் இருக்க முடியாது என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அது மட்டுமின்றி, டாஸ்மாக் கடைகளில் கிடைப்பதைவிட மலிவு விலையில் சாராயம் கிடைத்தால் அதை நோக்கிப் போகிறார்கள். கள்ளச்சாராயத்தால் இரண்டு நாட்களில் இறந்தவர்கள் எண்ணிக்கை 22 என்று சொல்லும் அதேவேளை டாஸ்மாக் மதுவைக் குடித்து செத்தவர்கள் எண்ணிக்கை லட்சக் கணக்கில் உள்ளது. அவ்வாறு இறந்தவர்கள் குடும்பத்திற்கு இந்த அரசு என்ன நிவாரணம் வழங்கியிருக்கிறது. கள்ளச் சாராயம் குடித்து இறந்தவர்கள் குடும்பத்திற்கு இழப்பீடாக ரூ.10 லட்சம் வழங்கியிருக்கிறார் தமிழக முதல்வர். இதுவரை இல்லாத வகையில் இப்படியொரு நிவாரணம் ஏன்? இறந்தவர்கள் குடும்பத்திற்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டியது அரசின் கடமை. இதே அளவு எல்லா விபத்துகளிலும் இறந்தவர்கள் குடும்பங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் அல்லவா? உதாரணத்திற்கு பட்டாசு ஆலை விபத்துகளில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம்தான் இந்த அரசு வழங்கியது. மின்சாரம் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.1 லட்சம்தான் வழங்கினார்கள். மஞ்சு விரட்டில் மாடு முட்டி இறந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம்தான்.

ஆனால், இப்போது கள்ளச் சாராயத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் அறிவித்துள்ளது மட்டுமின்றி பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளவர்களை மருத்துவமனைக்குச் சென்று முதல்வரே பார்க்கிறார். அமைச்சர்கள் எல்லாம் இறந்தவர்கள் வீடுகளுக்குச் சென்று இழப்பீடு நிவாரணத்தை நேரில் வழங்குகிறார்கள். இது எல்லாம் கூடாது என்று சொல்லவில்லை. இதில் மட்டும் ஏன் இவ்வளவு அக்கறை

என்றுதான் கேட்கிறோம்?

இந்த சாராயத்தில் ஆலைகளில் பயன்படுத் தப்படும் மெத்தனால் கலந்து இருந்ததுதான் காரணம் என்கிறார்கள். மெத்தனாலை விற்ற தனியார் நிறுவன பொறியாளரைக் கைது செய்துள்ளார்கள். மெத்தனால் விற்பனை மிகுந்த கட்டுபாடுடன் நடக்கக் கூடியது. மெத்தனாலை அவ்வளவு எளிதாக வாங்கிவிட முடியாது. மெத்தனால் விற்பனையைக் கட்டுப்படுத்தும் முழு அதிகாரமும் அரசிடம்தான் உள்ளது. அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் எவருக் கும் தெரியாமல் இந்த மெத்தனால் விற்பனை நடந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியிருக்க அரசின் மெத்தனப் போக்கே மெத்தனால் விற்பனைக்கும் அதை கள்ளச் சாராயத்திற்குப் பயன்படுத்தியதற்கும் காரணமாகும்.

காவல்துறை அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள் சிலர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் மட்டும்தானா இதற்குப் பொறுப்பு. கள்ளச் சாராயமும் போதைப் பொருள்களும் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி நடமாடுகின்றன என்றால் அதற்கு ஆட்சியாளர்களின் அவர்களுக்கு நெருக்கமான வர்களின் ஆசி இல்லாமலா இவையெல்லாம் சாத்தியம். மணற் கொள்ளையைத் தடுத்த முறப்பநாடு கிராம நிர்வாக அலுவலர் மணல் மாஃபியாவால் வெட்டிக் கொல்லப்பட்டார். சட்டப்படி, நியாயமாக நடக்கக் கூடிய அதிகாரிகளை அடங்கிப் போகச் சொல்வதும் அச்சுறுத்துவதும் யார்? மோசமான அதிகாரிக ளால்தான் இவை நடக்கின்றன என்றாலும் அவர்களைப் பாதுகாக்கின்ற வேலையை யார் செய்கிறார்கள்?

இரண்டு நாட்களில் சுமார் 1600 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கிட்டத்தட்ட 1800 வழக்குகள் போடப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் இந்த கள்ளச்சாராய விற்பனை நடந்து கொண்டுதான் இருந்திருக்கிறது. 2002ல் இருந்து கள்ளசாராய இறப்புக்குக் காரணம் மெத்தனால் தான் என்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஏன் மெத்தனால் விற்பனையை கட்டுக்குள் வைத்திருக்கவில்லை? காவல்துறைத் தலைவர் திரு.சைலேந்திரபாபு அவர்கள், கனியாமூர் பிரச்சினையில் பள்ளி நிர்வாகத்திற்கும் ஸ்ரீமதியின் மரணத்திற்கும் தொடர்பு இல்லை என்று எடுத்த எடுப்பிலேயே சொன்னதன் விளைவு இப்போது ஸ்ரீமதி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1200 பக்க குற்றப் பத்திரிகையில் அது கொலை அல்ல தற்கொலை என்கிற ரீதியில்தான் சொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. அதேபோல, இந்த கள்ளச் சாராய விசயத்திலும் பொறியாளர் எழியன் நம்பி மெத்தனால் விற்றதுதான் இதற்குக் காரணம் என்று மடைமாற்றம் செய்யப்படுகிறது. அதாவது இது (கள்ளச்) சாராயச் சாவு இல்லை என்று சொல்லப் பார்க்கிறார்கள். ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் எதுவும் நடக்க வாய்ப் பில்லை. எடப்பாடி பழனிசாமி, கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதில் திமுக அரசின் தோல்வியையே இது காட்டுகிறது என்கிறார். அவர் ஆட்சியிலும் கள்ளச் சாராய இறப்புகள் நடந்துள்ளன. அப்போது அவர், டாஸ்மாக் இல்லையென்றால், மக்கள் கள்ளச் சாராயத்தை நோக்கிப் போவார்கள் என்றார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களிடம் கள்ளச் சாராயம் எனும் கொடும் அரக்கன் பக்கம் யாரும் போகாதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அப்படி யென்றால் நல்லச் சாராயம் குடிக்கலாமா? எது நல்ல சாராயம்? டாஸ்மாக் சரக்கா? மது விற்பனையின் காரணமாக பல குடும்பங்கள் தெருவுக்கு வந்துவிட்டன. பல குற்றங்கள் மதுவினால்தான் ஏற்படுகின்றன. குடித்துவிட்டு சொந்த மகளைக் கூட பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குகிறார்கள். குடியின் காரணமாகவே நண்பர்களுக்குள் சண்டை வந்து அது கொலையில் முடிகிறது. ஒரு குடிகாரனால், பேருந்து நடத்துநர் எரித்துக் கொல்லப்பட்டார். மது குடிக்க காசு இல்லாததால் திருடுகிறார்கள். வழிப்பறிகள் இதன் காரணமாகவே நடக்கின்றன. வழிபறிச் சம்பவங்களில் பெண்கள் உயிரிழக்கிறார்கள். இப்படி குடியின் காரணமாகவே நாளும் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. டாஸ்மாக் குடியால், குடிகாரர்களால் பாதிக்கப்பட்டோருக்கும் இந்த அரசாங்கம் இதுபோன்று ரூ.10 லட்சம் இழப்பீடு தர வேண்டும். இல்லையேல் பூரண மது விலக்கை அமல்படுத்த வேண்டும். டாஸ்மாக் மதுக்கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட வேண்டும். டாஸ்மாக்கில் வேலை பார்க்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் அரசு மாற்று வேலை வழங்க வேண்டும். கள்ளச் சாராயச் சாவுகள் அல்ல, நல்ல! சாராயச் சாவுகளும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சாராயத்தில் ஏது கள்ளச் சாராயம் நல்ல சாராயம்! ❑

# ஏஐசிசிடியு முயற்சியால் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்பு

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, அம்பாசமுத்திரம் கிராமத்தில் மூன்று பெண்கள், இரண்டு குழந்தைகள் உட்பட 7 பேர் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வந்து கொத்தடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிற செய்தி தமிழ்நாடு சிபிஐ(எம்எல்) தோழர்களுக்குக் கிடைத்தது. அந்த தொழிலாளர்கள் மகாராஷ்டிரா வின் பீட் மற்றும் பார்பானி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை அண்ணா கோத்வே என்கிற ஒப்பந்தக்காரர்தான் அடிமைகளாக வைத்திருந்துள்ளார். அவர் சரத்பவாரின் தேசிய மாநாட்டு கட்சியைச் சேர்ந்தவர். தமிழ்நாட்டில் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலைக்காக தேனி, மதுரை மாவட்டங்களில் கரும்பு வெட்டுவதற்காக 100 தொழிலாளர்களை அவர் ஏற்பாடு செய்துள்ளார். அந்தத் தொழிலாளர்களுக்கு மராத்தி தவிர வேறு மொழி தெரியவில்லை. 2.5.2023 அன்று இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சந்திரமோகன் வழிகாட்டுதலில் மாநிலக்குழு உறுப்பினர் பொன்னுதுரை மற்றும் தோழர் ஜெகதீஸ்குமார் அந்த தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று பார்த்தனர். அவர்களின் நிலைமை மிக மோசமானதாக இருந்தது. ஒப்பந்தக்காரர் தோழர்கள் தொழிலாளர் களைச் சந்திக்க விடாமல் மிரட்டியுள்ளார். இருப்பினும் தோழர்கள் தொழிலாளர்களைச் சந்தித்து விவரங்கள் தெரிந்து கொண்டனர். ஒரு நாளைக்கு காலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை 16 மணி நேரம் வேலை வாங்கப்பட்டுள் ளார்கள். ஒரு டன் கரும்பு வெட்ட இரண்டு பேருக்கு ரூ.275 மட்டுமே கூலியாகக் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், ஒப்பந்தக்காரர் ஆலை நிர்வாகத்தி டமிருந்து ஒரு டன் கரும்பு வெட்ட கூலியாக ரூ.1000 வாங்கியுள்ளார். தொழிலாளர்கள் வசிக்கும் இடமும் வேலை செய்யும் இடமும் சுகாதாரம் இல்லாமல் மிக மோசமாக இருந்தது. பாலியல் துன்புறுத்தல்களையும் தொழிலாளர்கள் சந்தித்துள்ளார்கள்.

இது தொடர்பாக மதுரை மாவட்ட ஏஐசிசிடியு சார்பாக மதுரை மாவட்ட ஆட்சி யரிடம் மே 3ம் தேதி புகார் அளிக்கப் பட்டது. மறுநாளே காவல்துறையும் பல்வேறு அரசுத் ஒப்பந்தகாரர் துணையுடன் வந்து சேர்ந்தார்கள். பல்வேறு மிரட்டல்களுக்கு மத்தியில் சில தொழிலாளர்கள் தங்களின் வேலை நிலைமை மற்றும் அடிமை நிலைமையைச் சொல்லியுள்ளார்கள். பல தொழிலாளர்கள் பயந்து போய்விட்டனர். அரசு அதிகாரிகள், ஒப்பந்தக்காரர் அண்ணா கோத்வே மீது கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்வதற்குப் பதிலாக தங்களிடம் பேசிய 7 தொழிலாளர்களை மட்டும் விடுவித்துவிட நடவடிக்கை மேற்கொண்டனர். அதிகாரிகள் குற்றமிழைத்த சர்க்கரை ஆலை மீதோ ஒப்பந்தக்காரர் மீதோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தயாராக இல்லை. சர்க்கரை ஆலை நிர்வாகத்திடம் சொல்லி 7 தொழிலாளர்களை மட்டும் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டார்கள். ராஜஸ்ரீ ஆலை நிர்வாகம் அந்தத் தொழிலாளர்களுக்கு மும்பை செல்ல முன்பதிவில்லாத ரயில் டிக்கட்டை மட்டும் எடுத்துக் கொடுத்துவிட்டு, அவர்கள் வேலை பார்த்ததற்கு கூலியோ, பணப் பயனோ, பயணத்திற்கு உணவோ, பணமோ எதுவும் கொடுக்காமல் அனுப்பிவிட்டது.

அரசு அதிகாரிகளும் ஒப்பந்தக்காரர்களும் கள்ளக் கூட்டு வைத்துக் கொண்டு புலம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களைச் சுரண்டு கிறார்கள். மகாராஷ்டிரா, வடக்கு மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளில் உள்ள பழங்குடிகள், தலித்துகள் அவர்களின் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு இதுபோன்று கொத்தடிமைகளாக ஒப்பந்த மாஃபியாக்களால் தமிழ்நாடு போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

கொத்தடிமைச் சட்டத்தின் கீழ் ராஜஸ்ரீ நிர்வாகத்தின் மீதும் ஒப்பந்தக்காரர் அண்ணா கோத்வே மீதும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், கொத்தடிமைகளாக உள்ள மராத்தித் தொழிலாளர்கள் அனைவரையும் விடுவித்து அவர்களுக்குரிய கூலி, பணப் பயன் களை முழுவதுமாக வழங்கிட வேண்டும், உணவு உள்ளிட்ட பயணச் செலவுகளுடன் அவர்களை சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என ஏஐசிசிடியு கோருகிறது. ❑

## விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் மீது அரசியல் காழ்ப்புணர்வுடன் புதுச்சேரி மாநில துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் வசைப்பாடியதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) கண்டனம்

*இந்திய நாட்டில் உள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அல்லது சாதாரண குடிமக்கள் கூட நாடு முழுவதும் சென்று அரசியல் இயக்கங்களில் பங்கு பெறுவதற்கும் ஜனநாயக ரீதியாக போராட்டங்களைக் கட்டமைப்பதற்கும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உரிமை வழங்கி உள்ளதை, அரசியல் அமைப்புப் பொறுப்பு வகிக்கும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் சற்றும் நாகரீகம் இன்றி தோழர் திருமாவளவன் பற்றி கருத்துக்களை வெளியிட்டு இருப்பது அரசியலமைப்பு சட்டத்தை மீறிய செயலாகும்.*

*கருத்துரிமை, பேச்சுரிமை, நாடு முழுவதும் சென்று அரசியல், சமூக கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்கும் உரிமைகளை ஏற்றுக் கொள்ளாத, அவற்றை மதிக்காத, அங்கீகரிக்க முடியாத துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அப்பதவியில் நீடிக்கும் தகுதியை இழந்து விட்டதால், உடனடியாக குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களை தகுதி நீக்கம் செய்து திரும்பப் பெற வேண்டும்.*

*ஜிப்மர் மருத்துவமனை நிர்வாகம் நோயாளிகளை இழுத்தடிப்பதும் போதுமான மருந்துகளை கையிருப்பில் வைத்துக் கொள்ளாததும், மருத்துவ சேவைகளுக்கு கட்டணம் வசூலிப்பதும் உலகம் அறிந்த செய்தியாகும்.*

*குடிமக்கள் அனைவரும் கட்டணம் இன்றி, தடையின்றி மருத்துவ சேவைகள் அரசிடம் இருந்து பெறுவது அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) தொடர்ந்து வலியுறுத்திப் போராடி வருகிறது.*

*மருத்துவ சேவைகளுக்கு கட்டணம் வசூலிப்பதை கண்டித்தும், கட்டணம் நிர்ணயம் செய்யப்படுவதை திரும்பப் பெற வேண்டியும்தான் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் தோழர் தொல்.திருமாவளவன் மற்றும் விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் தோழர் ரவிக்குமார் ஆகியோர் போராடி உள்ளனர்.*

*மருத்துவ சேவையை தனியார் மயமாக்குவதும் அரசு மருத்துவமனைகளில் கட்டணம் வசூலிப்பதையும் ஒன்றிய பாஜக மோடி அரசாங்கம் செய்து வருவதை தமிழிசை ஆதரிப்பதால் தான் அதை எதிர்த்து மக்களுக்காக போராடுபவர்கள் மீது கடும் ஆத்திரம் கொள்கிறார்.*

*சமீபத்தில் தமிழக திமுக அரசாங்கம் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 8 மணி நேரத்தில் இருந்து 12 மணி நேரமாக அதிகரித்து சட்டத் திருத்தம் கொண்டு வந்த போது, திமுக தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் திமுக கூட்டணி கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் திமுக அரசு அந்த சட்ட முன் வரைவை திரும்பப் பெற்றது.*

*ஆனால், தமிழிசை சௌந்தரராஜன் தெலுங்கானா, புதுச்சேரி மாநிலங்களில் ஆளுநராக இருந்து கொண்டு முதலாளிகளுக்கு ஆதரவாக தான் கருத்துக்களை வெளியிட்ட போது அது அண்டை மாநிலங்களின் உள் விவகாரத்தில் தலையீடு என்பதை மறந்து விட்டார் போலும்.*

*ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருவோர் 80 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் தமிழ்நாடு, புதுச்சேரி மாநில மக்களே. அவர்கள் பாதிக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவது குற்றம்போல் பேசுவதை தமிழிசை சௌந்தரராஜன் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏழை மக்களுக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவதை அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எரிய வேண்டாம் என்றும் அது நொறுங்கி அவர் தலையிலே விழும் என்பதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) எச்சரிக்கையாக சொல்லிக் கொள்கிறது.*

**சோ.பாலசுப்பிரமணியன்,**
**மத்திய கமிட்டி உறுப்பினர்**
**இகக(மாலெ)**

# ஜெய் ஜவான், ஜெய் கிசான், ஜெய் பஹல்வான்!

## நீதிக்காகப் போராடும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக ஒன்றுபட்டு நிற்க சிபிஐஎம்எல் பொதுச் செயலாளர் திபங்கர் அழைப்பு!



நமது மல்யுத்த வீராங்கனைகளுக்கு நீதியை உறுதி செய்வதற்காக நமது முழு நாட்டையும் ஜந்தர் மந்தராக மாற்றுவதற்கான நேரம் இது!

இன்று ஜந்தர் மந்தரில் நடைபெற்ற மல்யுத்தப் போராட்டத்தில் சிபிஐ(எம்எல்) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் கலந்து கொண்டார். பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷன் சரண் சிங்கிற்கு எதிராக தைரியமாகப் பேசும் மற்றும் பாலின நீதிக்கான போராட்டத்தை தைரியமாக வழிநடத்தும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு தனது ஒருமைப் பாட்டைத் தெரிவித்தார். பிரிஜ் பூஷன் ஷரண் சிங் போன்ற வர்களுக்கு பாஜக வழங்கிய அனுசரணை மற்றும் தண்டனையின்மை எவ்வாறு மல்யுத்த வீரர்களின் நீதிக்கான போருக்கு உறுதியையும் ஆதரவையும் வலுப்படுத்தப் போகிறது என்று திபங்கர் கூறினார். "நமது பெண் மல்யுத்த வீராங்கனைகள் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது, மணிப்பூரில் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டி ருக்கும் வேளையில், ஒன்றிய பாஜக அரசுக்கு சொந்த மக்களுக்காக நேரம் ஒதுக்க முடியாத நிலையில், பிரதமரோ கர்நாடகா தேர்தல் பிரச்சாரத்தில் மும்முரமாக இருக்கிறார்" என்று அவர் வேதனை தெரிவித்தார்.

ஜந்தர் மந்தரில் மல்யுத்த வீரர்களின் இரண்டாம் கட்ட தர்ணா நடந்து இரண்டு வாரங்கள் ஆகிறது. உச்ச நீதிமன்றத்தின் தலை யீட்டைத் தொடர்ந்து பாஜக எம்பி பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டு 10 நாட்கள் கடந்துவிட்டன. இந்தியாவின் விருது பெற்ற மல்யுத்த வீரர்கள் கடுமையான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ள நிலையில், இந்த பத்து நாட்களில், குற்றவாளி கைது செய்யப்படாதது மட்டுமின்றி எந்தவொரு விசாரணையும்கூட நடத்தப் படவில்லை.

புகார் அளித்த ஏழு பேரில் ஒருவர் மைனர், எனவே இரண்டு முதல் தகவல் அறிக்கைகளில் ஒன்று பாலியல் குற்றங்களுக்கு எதிரான குழந்தைகள் பாதுகாப்பு (போக்சோ) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் பிரிஜ் பூஷன் சரண் சிங் சுதந்திரமாக சுற்றித் திரிந்து கொண்டு பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தி மல்யுத்த வீரர்களை மிரட்டுகிறார். மோடி ஆட்சியின் ஆதரவும் பாஜ மேலிடத்தின் ஆதரவும் தனக்கு உள்ளது என்று மொத்த உலகத்திற்கும் சொல்கிறார். பிரதமர் மோடியோ

உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ அல்லது பாஜக தலைவர் நட்டாவோ தன்னை பதவி விலகச் சொன்னால், பதவியை ராஜினாமா செய்துவிடுவேன் என்கிறார். ஆனால் இந்தத் தலைவர்கள் யாரும் வாயைத் திறக்கவில்லை.

இகக(மாலெ), அகில இந்திய மாணவர் கழகம், ஏஐசிசிடியு, புரட்சிகர இளைஞர் கழகம் மற்றும் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஜந்தர் மந்தரிலுள்ள போராட்ட இடத்திற்குச் சென்றது. வினேஷ் போகட் மற்றும் சாக்ஷி மாலிக் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் உரையாடினர். சிபிஐ(எம்எல்) பொதுச் செயலாளரும் அவர்களுடன் உரையாடினார். ஒருமைப்பாடு தெரிவித்தார்.

இந்தியாவின் தலைசிறந்த பெண் மல்யுத்த வீரர்களின் நீதிக்கான போராட்டமானது, கடந்த பத்தாண்டுகளில் நடைபெற்று வரும் மக்கள் போராட்டங்களின் உணர்வைத் தூண்டி, தற்போதைய அநீதி மற்றும் பாசிச ஆக்கிரமிப்பு ஆட்சிக்கு எதிராக ஒரு தீர்மானகரமான எழுச்சியை உருவாக்கும் ஆற்றலைக் கொண் டுள்ளது. பஞ்சாப், ஹரியானா மற்றும் மேற்கு உ.பி.யைச் சேர்ந்த விவசாயிகள், தில்லியைச் சேர்ந்த தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் மற்றும் பிற செயற்பாட்டாளர்கள் ஜந்தர் மந்தரில் இன்று ஒன்றிணைந்திருப்பது அவ்வாற்றலை வெளிக் காட்டுவதாக இருந்தது. மேலும், "ஜெய் ஜவான், ஜெய் கிசான், ஜெய் பஹல்வான்" முழக்கமானது சந்தேகத்திற்கு இடமின்றி போராட்டக்காரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி ஒற்றுமை உணர்வை வளர்த்து, உறுதியை ஏற்படுத்தும்.

நமது மல்யுத்த வீரர்களுக்கு ஆதரவாக நிற்கவும் பிரிஜ் பூஷன் சரண் சிங் கைது செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும் பாலின நீதியை உத்தரவாதப்படுத்தவும் நாட்டு மக்களை சிபிஐ(எம்எல்) கேட்டுக்கொள்கிறது.

**மத்தியக் கமிட்டி,**
**இகக(மாலெ) விடுதலை**

# இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அம்பேத்கர் சுடர் விருது

விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒவ்வொரு ஆண்டும் அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ் உள்ளிட்ட பெருந் தலைவர்கள் பெயரில் விருது வழங்கி வருகிறது. 2023ஆம் ஆண்டிற்கான அம்பேத்கர் சுடர் விருதினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அவர்களுக்கு அளித்து கவுரவித்துள்ளது. விருது வழங்கு நிகழ்ச்சி மே 28 அன்று சென்னையில் நடைபெறவுள்ளது. பெரியார் ஒளி விருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் து.ராஜா அவர்களுக்கும் மாமனிதர் மார்க்ஸ் விருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்துள்ளது.





# கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தல் களத்தில் இகக(மாலெ)







**வேட்பாளர்களுடன் இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர்**

# தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொன் விழா




**தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொன்விழா மாநாட்டில் ஏஐசிசிடியு சார்பாக தமிழ்நாடு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் க.ஞானதேசிகன் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார். ஏஐசிசிடியு தலைவர்கள் தோழர்கள் இரணியப்பன், திருநாவுக்கரசு மற்றும் பிடிஆர், அன்சர் ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.**

## மே நாள் கொடியேற்றும் நிகழ்ச்சி





*சேலம் மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) பனமரத்துப்பட்டி ஒன்றிய கமிட்டியின் சார்பில், 14.5.23 அன்று 12 இடங்களில் மே நாள் கொடியேற்றம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிளை செயலாளர்கள் தலைமை தாங்க உள்ளூர் தலைவர்கள் கொடியேற்றி வைத்தனர்.*

*பனமரத்துப்பட்டியில் மே நாள் பொதுக் கூட்டம் தோழர் பாலு தலைமையில் நடைபெற்றது. இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சந்திரமோகன், மூத்த தோழர் மோகனசுந்தரம், மாவட்டச் செயலாளர் தோழர் வேல்முருகன், மாநிலக் கமிட்டி உறுப்பினர் தோழர் அய்யந்துரை, ஒன்றிய செயலாளர் தோழர் அன்பு, ஏஐசிசிடியு மாவட்டத் தலைவர் தோழர் நடராஜன் மற்றும் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் ஜெயராமன், ரேவதி ஆகியோர் உரையாற்றினர்.*






# ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்கப் போராடிய எம்எல் கட்சி தோழர்கள் மீது பொய் வழக்குப் போட்டு கைது செய்ததற்குக் கண்டனம்

*கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் நீண்டகரை பி. கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்:919யில் 25 சென்ட் நிலத்தை ராஜமோகன் என்பவரும் 10 சென்ட்நிலத்தை போலிச்சாமியார் அய்யப்பனும் ஆக்கிரமித்துள்ளனர். ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க கோட்டாட்சியர், தாசில்தார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளுக்கு 04.04.2023ம் தேதியன்று மனு கொடுக்கப்பட்டது. மனு மீது நடவடிக்கை எடுக்காமல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தனர். எனவே, ஆக்கிரமிப்பாளர்ளை அகற்றிட 11.05.2023ம் தேதியன்று மேற்படி ராஜமோகன் ஆக்கிரமித்து வைத்திருந்த நிலத்தில் போராட்டம் நடத்தப்பட்டது. அரசு நிர்வாகம் இகக(மாலெ) குமரி மாவட்டச் செயலாளர் அந்தோணிமுத்து, மாநிலக்குழு உறுப்பினர் சுசீலா, கார்மல் உள்ளிட்ட 10 பேர் மீது பொய் வழக்கு போட்டது. அதுமட்டுமின்றி தோழர்கள் அனிற்றா பிறின்ஸி, கார்மல் லூர்துபாய், ரமேஷ், ஜெயக்குமார், ததேயூஸ், சாந்தி, சகாயமேரி உள்ளிட்ட 7 பேர்களை கைது செய்தது. நாட்டில் நிலமில்லாமல், வீடில்லாமல் உழைக்கும் தொழிலாளர்கள் பலர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வீட்டு மனை அரசிடம் கேட்டால் நிலம் இல்லை என்கிறார்கள். ஆனால், இது போன்று அரசாங்க புறம்போக்கு நிலங்களை ஆட்சியாளர்களின் ஆசியுடன் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார்கள். ஆகவே வீடில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டும் என்று கோரிதான், சட்டவிரோதமாக தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள நிலங்களை மீட்கும் போராட்டத்தை சிபிஐஎம்எல் கட்சி நடத்தியது. நிலங்களில் இருந்து ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக சட்டவிரோத ஆக்கிரமிப்பை அகற்றப் போராடிய எம்எல் கட்சித் தலைவர்கள் மீது பொய் வழக்குப் போட்டு, பெண் தோழர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அரசு எந்திரத்தின் இந்தச் செயலானது சட்டவிரோதச் செயல்களை ஊக்குவிப்பதாகவேத் தெரிகிறது.*

*இகக(மாலெ) குமரி மாவட்டச் செயலாளர் அந்தோணிமுத்து, மாநிலக்குழு உறுப்பினர்கள் சுசீலா, கார்மல் உள்ளிட்ட எம்எல் கட்சித் தோழர்கள் மீது ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் போடப்பட்டுள்ள பொய் வழக்கை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ள தோழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இகக(மாலெ) கோருகிறது. சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த நிலங்களை வீடற்ற ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் இகக(மாலெ) கோருகிறது. இக்கோரிக்கைகள் தொடர்பாக இகக(மாலெ) கன்னியாகுமரி மாவட்டக் கமிட்டி தோழர்கள் மாவட்ட ஆட்சியரைப் பார்த்து மனு அளித்துள்ளனர். அந்த மனு மீது மாவட்ட நிர்வாகமும் அரசும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இகக(மாலெ) மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.*



# வழக்கறிஞர்களின் உரிமையை முடக்குவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




மதுரை வழக்கறிஞர்கள் முகம்மது யூசுப் மற்றும் முகம்மது அப்பாஸ் இருவரும் தேசிய புலனாய்வு முகமை(NIA)யால் குற்றவாளிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டவர்களுக்காக நீதிமன்றத்தில் ஆஜரானார்கள் என்பதற்காக அவர்களையும் குற்றவாளிகள் ஆக்கி கைது செய்துள்ளது தேசிய புலனாய்வு முகமை. இது வழக்கறிஞர்களின் உரிமையை மட்டுமின்றி வழக்கறிஞர்கள் தொழிலையே முடக்கும் செயல் ஆகும். யுஏபிஏ சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு வாதாடும் வழக்கறிஞர்களும் அச்சட்டத்தின் படி குற்றவாளிகள் என்கிற சரத்து அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான மிகவும் மோசமான சரத்தாகும். அம்பாசமுத்திரம் ஏஎஸ்பி பல் பிடுங்கிய பல்வீர் சிங்கிற்கு எதிராக பாதிக்கப் பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர் மகராஜனை தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் பொய் வழக்கு போட்டு கைது செய்தார்கள். இதுவும் மனித உரிமை மீறல் ஆகும். குற்றவாளி பல்வீர் சிங்கை இது வரை கைது செய்யவில்லை. பல்பிடுங்கிய வழக்கில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதிவு செய்துள்ள போதும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இந்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கும் வாதாடும் வழக்கறிஞர்களை அச்சுறுத்தும் வகையில் காவல் துறை கைது செய்து சிறையில் அடைக்கிறது. குறிப்பாக சிறுபான்மையினருக்காகக் குரல் கொடுக்கும் வழக்கறிஞர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

வழக்கறிஞர்கள் அப்பாஸ் மற்றும் யூசுப் ஆகியோரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்ததைக் கண்டித்தும், வழக்கறிஞர் மகாராஜன் அவர்களை தென்காசி மாவட்ட காவல்துறை பொய் வழக்கில் கைது செய்ததைக் கண்டித்தும் பல் பிடுங்கிய வழக்கில் குற்றவாளி பல்வீர்சிங் மற்றும் காவல் அதிகாரிகளைக் கைது செய்யக் கோரியும் வழக்கறிஞர் பாதுகாப்புச் சட்டத்தை உடனே நிறைவேற்றக் கோரியும் 12.5.2023 அன்று திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் முன்பு சமூக நீதிக்கான வழக்கறிஞர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க(AILAJ)த்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் ஜி.ரமேஷ் தலைமை தாங்கினார். அகில இந்திய வழக்கறிஞர் சங்க(AILU)த்தின் மாநிலக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் கு.பழனி முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் முபாரக், முருகன், சுதர்சன் மற்றும் அப்துல் நிஜாம், ஆரிப், பிரபாகர், லியோன், அசார், தௌபிக், கோதண்டராமன், முகமது நயினர், காதர், முகமது ஹனிபா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். ❑

# கள்ளச் சாராய வியாபாரிகள் காவல்துறை கூட்டு முறியடிக்கப்பட வேண்டும்!
# தமிழ்நாட்டில் முழுமையான மது விலக்கு வேண்டும்!
# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) வலியுறுத்தல்!

தமிழ்நாட்டில் மே 14 அன்று இருவேறு இடங்களில் நடந்த கள்ளச் சாராய விற்பனையால் குடித்த 14 பேர் பலியாகி உள்ளனர். விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே கள்ளச்சாராயம் குடித்ததில் 9 பேர் உயிரிழப்பு, 43 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே போல, செங்கல்பட்டு மாவட்டத்தில் சித்தாமூரில் 5 பேர் உயிரிழப்பு 7 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகம் முழுவதும் உடனடியாக காவல்துறை சோதனை நடத்தினர். கள்ளச்சாராய வியாபாரிகளிடமிருந்து இதுவரை, 5901 லிட்டர் சாராயம் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கள்ளச் சாராய வியாபாரிகள் 247 பேரை கைது செய்ததாகவும் அவர்களில் 81 பேர் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் 121 பேர் சொந்த ஜாமினில் விடுதலை செய்யப்பட்டதாகவும் (ஆளும் கட்சி செல்வாக்கு மிக்கவர்கள் போலும்!) காவல்துறை அறிக்கை தெரிவிக்கிறது.

காவல்துறைக்கு தெரிந்தேதான் கள்ளச் சாராய வியாபாரம் நடைபெற்று வருகிறது. காவல்துறை–கள்ளச் சாராய வியாபாரிகள் கூட்டை உடைக்காமல் கள்ளச் சாராய உற்பத்தி விற்பனையைத் தடுக்க இயலாது ; மக்கள் உயிர்களை பாதுகாக்கவும் இயலாது.

கள்ளச் சாராயம், டாஸ்மாக் மது இரண்டும் மக்களுக்கு கேடானதாகும். தமிழ்நாட்டில், சாராயத்தால், மதுப் பழக்கத்தால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வருமானத்தையும், உடல்நலம் இழந்து வீதிக்கு வந்துள்ளன. இதனால், உழைக்கும் பெண்கள் அன்றாடம் குடும்பத்தில் ஏராளமான துன்பங்களை சந்தித்து வருகின்றனர். தமிழ்நாட்டுப் பெண்கள் டாஸ்மாக் சாராயக் கடைகளுக்கு எதிராக நடத்திய போர்க்குணமிக்கப் போராட்டங்களை நாம் மறந்துவிட முடியாது.

தற்போதைய சாவுகளை தற்காலிக இழப்புகளாக கருதி நிவாரணங்கள் வழங்குவது மூலமாக கடந்து செல்லக் கூடாது; இந்த பெரும் துயரச் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும். அபாய எச்சரிக்கையாக கருதி நீண்ட கால நோக்கில் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

சிபிஐஎம்எல் மாநிலக் கமிட்டி பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகிறது.

- கள்ளச் சாராய வியாபாரிகள் மட்டுமல்லாமல், அதற்குத் துணைபோகும் அதிகாரிகள், காவல்துறை மற்றும் அரசியல்வாதிகளையும் உடனே கைது செய்ய வேண்டும்! கண்காணிக்கத் தவறிய உயர்நிலை காவல் அதிகாரிகளைப் பொறுப்பாக்கிட வேண்டும்.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள டாஸ்மாக் மதுக் கடைகளை விரைந்து மூட வேண்டும்!

15.5.2023

பழ.ஆசைத்தம்பி
மாநிலச் செயலாளர்,
இகக(மாலெ), தமிழ்நாடு



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.05.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# மே 17 அயர்லா ஆர்ப்பாட்டங்கள்






















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh